Koviloor Digital Library

3-3

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

உ

ஸ்ரீ புவனேச்வரி
ஸ்ரீ சக்ரபூர்ண மஹாமேரு
கோடி அர்ச்சனைச் சிறப்பிதழ்

★

விளக்கம் தந்திருப்பவர் :

ஸ்காந்த கேஸரி, மஹாபாரத பாஸ்கர நியாய-மீமாம்ஸா சிரோமணி

திருவெண்காடு

T. K. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்

புதுக்கோட்டை சிவகாமி அச்சகத்தார் அன்பளிப்பு.

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ பிரம்மேந்திர
ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

புவனேச்வரி நகர் :: புதுக்கோட்டை

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

A·NO: 4197
Q25

Koviloor Digital Library

Koviloor Digital Library
உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
3-3
4197
ஔ25

ஸ்ரீ புவனேச்வரி
ஸ்ரீ சக்ரபூர்ண மஹாமேரு
கோடி அர்ச்சனைச் சிறப்பிதழ்

விளக்கம் தந்திருப்பவர் :

ஸ்காந்த கேஸரீ, மஹாபாரத பாஸ்கர
நியாய-மீமாம்ஸா சிரோமணி

திருவெண்காடு
T. K. முத்துஸ்வாமி சாஸ்திரிகள்

இஃது
புதுக்கோட்டை
சிவகாமி அச்சகத்தார்
அன்பளிப்பு.

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ பிரம்மேந்திர
ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

புவனேச்வரி நகர் :: புதுக்கோட்டை.

Koviloor Digital Library

Koviloor Digital Library

3-3

புதுக்கோட்டை ஸ்ரீ புவனேச்வரி

Koviloor Digital Library

ईशस्येच्छा कुण्डली ह्रींस्वरूपा
सर्वान्तरस्था चिन्त्यते यैस्सदैव ।
लोकोद्धारासक्तचित्तान्गुरूंस्तान्
वन्दे शान्तानन्दनाम्नो यतीन्द्रान् ॥

ஈசஸ்யேச்சா குண்டலீ ஹ்ரீம் ஸ்வரூபா
ஸர்வாந்தரஸ்தா சிந்த்யதே யைஸ்ஸதைவ।
லோகோத்தாரா ஸக்த சித்தான் குரூம்ஸ்தான்
வந்தே சாந்தானந்த நாம்னோ யதீந்த்ரான்।

Koviloor Digital Library

ஸ்ரீ புவனேச்வர்யை நம :

उद्यदिनद्युतिमिन्दुकिरीटां
तुङ्गकुचां नयनत्रययुक्ताम् ।
स्मेरमुखीं वरदांकुशपाशाऽ-
भीतिकरां प्रभजे भुवनेशीम् ॥ (शा. ति.)

இடது கீழ்மேல் கரங்களால் வரமுத்திரை பாசம் இவைகளேயும், வலது கீழ்மேல் கரங்களால் அபய முத்திரை அங்குசம் இவைகளேயும் வைத்துக் கொண்டிருப்பவளும், உதய சூரியன் போன்று பிரகாசிக்கின்றவளும், சந்திரன் திகழும் கிரீட முடையவளும், நிமிர்ந்த ஸ்தனமுள்ளவளும், மூன்று கண்களோடு கூடியவளும், புன்சிரிப்புத் தவழும் முகமுள்ளவளும் செந்தாமரை மலர்மீது வீற்றிருப்பவளுமான ஸ்ரீ புவனேச்வரீ தேவியை ஸேவிக்கின்றேன்.

ब्रह्मा यस्यै हरिर्यस्यै रुद्रो यस्यै व्यधान्नमः ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥
(शान्तनवी. टी.)

பிரம்மா விஷ்ணு ருத்திரன் இம்மூவரும் எவளுக்கு நமஸ்காரம் செய்தனரோ அந்த தேவிக்கு நான் மனோவாக்குக் காயங்களாலான மூன்று விதமான நமஸ்காரங்களேயும் செய்கிறேன்.

Koviloor Digital Library

மணித்வீபம்

எல்லா உலகங்களுக்கும் மேலாக மணித்வீபம் என்றொரு லோகம் விளங்குகிறது. இந்த லோகத்தை ஸுபாலோபநிஷத்து "ஸர்வலோகம்" என்ற பெயரால் அழைக்கும். सर्वस्मादधिको यस्मात् (ஸர்வஸ்மாததிகோ யஸ்மாத்) என்றபடி இந்த லோகம் எல்லா உலகங்களுக்கும் மேலாக உயர்ந்திருப்பதால், இதற்கு ஸர்வலோகம் என்ற பெயர் பொருத்தமானதே என்பார் வியாஸா சாரியார்.

இது பராசக்தியினுல் தான் வசிப்பதற்கென்றே மனதினுல் சிருஷ்டிக்கப்பட்டதாகும். இது பிரம்ம லோகம், வைகுண்டம், கைலாயம் முதலியவற்றை விட உயர்ந்ததாகும். இதன் பெருமையை விளக்க மாகவும் விஸ்தாரமாகவும் சிவரஹஸ்யம் ' என்ற பெருமைமிக்க நூலில் காணலாம். இது எல்லா உலகங்களுக்கும் மேலே இருந்துகொண்டு மற்றைய உலகங்களுக்கு குடைபோல் நின்று தாபம் தவிர்க் கின்றது. இது பிரளயத்தில் சுருங்கி சிருஷ்டி காலத்தில் விரிவடையும் தன்மை கொண்டது. இந்த மணித்வீபம் அமிர்தக் கடலால் சூழப்பட்டு அழகாய் காட்சியளிக்கின்றது.

பதினெண் பிராகாரங்கள்

பல யோஜனை உயரங்கொண்ட பதினெட்டுப் பிராகாரங்கள் இதற்கு அமைந்திருக்கின்றன. அவை எல்லாம் முறையே இரும்பு, வெண்கலம், செம்பு, ஈயம், பித்தளை, ஐம்பொன், வெள்ளி, பொன்,

Koviloor Digital Library

KOVILOOR MADALAYAM மடாலயம்

புஷ்பராகம், பத்மராகம், கோமேதகம், வைரம், வைடூர்யம், இந்திர நீலம், முத்து, மரகதம், பவளம், நவரத்னம் முதலியவற்ருல் அமைந்த மகிமை வாய்ந்த பிராகாரங்களாகும்.

இந்தப் பிராகாரங்களுக்குள்ளே மிக உயர்ந்த மலர் பொழியும் மரங்களும், தடாகங்களும் திகழ்கின்றன. பல தேவர்களும் அமர்ந்திருப்பர்.

பதினெட்டாவது பிராகாரத்தின் தனிச் சிறப்பு

நவரத்னங்களினுல் அமைந்த பிராகாரத்தின் உள்ளே, ஆம்நாய தேவிகளும், அரக்கரை அழிக்கவும் பக்தர்களைக் காக்கவும் புவனேச்வரியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல அவதாரங்களும் விளங்குகின்றன. காளீ, தாரா, மஹாவித்யா ஷோடசீ முதலிய பத்து மஹாவித்யைகளும் அவைகளின் அவதாரமான தேவிகளும் தோற்றமளிக்கின்றனர். ஏழுகோடி என்று புகழ்பெற்ற மந்திரங்களின் தேவதைகள் அனைவரும் காட்சியளிக்கின்றனர்.

சிந்தாமணி க்ருஹம்

இதன் நடுவில் ஆயிரம் கால்கள் கொண்டவைகளும் சிந்தாமணிக் கற்களால் ஆகியவைகளுமான நான்கு மாபெரும் மண்டபங்கள் மிளிருகின்றன. அவைகளை முறையே சிருங்கார மண்டபம், முக்தி மண்டபம், ஞான மண்டபம், ஏகாந்த மண்டபம் என்ற பெயர்களால் புகழ்ந்து பேசும் தேவீ பாக

Koviloor Digital Library

வதம். இம் மண்டபங்களைச் சுற்றிலும் நறுமணம் கமழும் பல புஷ்பங்கள் நிறைந்த செடிகளும் கொடிகளும் தருக்களும் அடர்ந்திருக்கும்.

தேவியின் அருளாட்சி

ஆங்குள்ள சிருங்கார மண்டபத்தில் புவேனச்வரீ தேவியார் பாடும் சங்கீதம் கேட்டனுபவிப்பாள். முக்தி மண்டபத்தில் அமர்ந்து பக்தர்களுக்கு முக்தி நல்குவாள். ஞான மண்டபத்தில் வீற்றிருந்து ஞானேபதேசம் அருளுவாள். ஏகாந்த மண்டபத்தில் அமைச்சியருடன் அமர்ந்திருந்து அகில உலகையும் காத்து அருள் வழங்கிக் கொண்டிருப்பாள்.

புவனேச்வரர் தோற்றம்

அந்த சிந்தாமணி க்ருஹத்தில் ஓர் அழகிய அரியணைமீது அமர்ந்திருப்பாள் ஜகன்மாதா புவனேச்வரீ தேவீ. அந்த அரியணைக்கு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன் என்ற நால்வரும் கால்களாய் அமைவர். ஸதாசிவன் அதன் மேல் பலகையாய் இருப்பார்.

அந்த அரியணைமீது தன்னுடைய விளையாட்டிற்காக புவனேச்வரியால் சிருஷ்டிக்கப்பட்ட புவனேச்வரர் அழகாய் வீற்றிருப்பார். கோடி மன்மதர் அழகெலாம் திரண்டு ஒன்றுனதுபோல பேரழகு பெற்றவர் அவர். பதினாறு வயதைக் குறிக்கும் அழகிய கோலம். ஐந்து முகமும், மூன்று கண்களும், மான், அபயம், பரசு, வரம், இவைகளைத்

Koviloor Digital Library

தாங்கும் திருக்கரங்களும் அவரை அலங்கரிக்கும். கோடி சூரியன் போன்ற பிரகாசமும், கோடி சந்திரர் களின் தண்மையும் அவர்பால் எழுந்து பிரகாசிக்கும்.

ஸ்ரீ புவனேச்வரியின் காட்சி

அவரது இடது மடியை தன் இருக்கையாகக் கொண்டு விளங்குகின்றாள் ஸர்வலோக ஜனனீ யாகிய புவனேச்வரீ. அவள் மொழி வீணையைப் பழிக்கும். இனியதாய் இருக்கும். அவள் திருச் செவியை அலங்கரிக்கும் இரண்டு காதணிகளும் ஸ்ரீ சக்ரத்தின் உருவம் பெற்று ஜ்வலிக்கும். பொன் னும் மணியும் கொழிக்கும். அழகிய கிரீடம் அவள் உலகங்களின் நாயகீ என்று அறிவுறுத்தும். முக்கண்ணும், வரம், பாசம், அங்குசம், அபயம் சேர்ந்த கைகளும், செந்நிறத் திருமேனியும், அவள் அழகுக்கு அழகு செய்யும். சௌந்தர்யத்தின் எல்லை யாய் கருணையின் திருவடிவாய் விளங்குவாள் புவனேசி என்று

वरपाशांकुशाऽभीतिलसद्बाहुचतुष्टया ।
सर्वशृंगारवेषाढ्या सुकुमाराङ्गवल्लरी ।
सौन्दर्यधारा सर्वस्वा निर्व्याजकरुणामयी ॥

என்று அவளைப் பாடிப் பெருமிதம் கொள்ளுகிறது தேவீபாகவதம்.

ஐசுவரியம், பேரறிவு, பராக்கிரமம், தயை இது போன்ற குணங்களெல்லாம் புவனேச்வரியிடம் நிலைகொண்டு நிற்கின்றன. அவைகளை பக்தர்

Koviloor Digital Library

களுக்கு வழங்கவும் அவளே திறனுள்ளவள். அநேக கோடி பிரமாண்டங்களுக்கு நாயகியாகிய புவனேச்வரீயே ஸ்வதந்திரை. அவளை வழிபடும் பக்தர்களுக்கு கிடைக்காதது என்று உலகத்தில் ஒன்றுமில்லை.

भुवनेशीत्येव वक्त्रे ददाति भुवनत्रयम् ।
मां पाहीत्यस्य वचसः देयाभावादृणान्विता ॥

என்றபடி "புவனேசீ" என்ற சொல் ஒரு பக்த னின் முகத்தினின்றும் எழுந்த உடனேயே மூவுல கத்தையும் கருணைபொழி புவனேசீ கொடுத்துவிடு கின்றாள். பின்கேட்கும் வரத்திற்கு கொடுக்க ஒன்றுமில்லாமல் பக்தனுக்கு கடனாளியாகிவிடு கின்றாள் என்று அவள் அவ்யாஜ கருணையை நினைவுபடுத்துகின்றார் வியாசாசாரியார்.

ஹரிஹராபேத ஸ்வரூபிணீ

இந்த புவனேச்வரீ ஹரிஹரரூபமாய் விளங்கு கின்றாள். ஹரிஹர அபேதத்தின் ரூபம்தான் புவ னேசீ என்று கூறுவர் மந்திர சாஸ்திரமறிந்த பெரியோர்.

காயத்ரியின் பொருள்

இவளே காயத்திரியின் பொருள் என்றும், காயத்திரியை உபாஸிப்பவர் அனைவரும் தேவியை உபாசிப்பவர் என்றும் வியாசாசாரியார் கூறுவார். ஆகவே "நதியுண்ட கடலென சமயத்தையுண்ட" என்றபடி எச்சமயத்தைச் சேர்ந்தவராலும்

Koviloor Digital Library

4197
இஅ5

உபாசிக்கத் தகுந்தவளாய் திகழுகின்ருள் ஸ்ரீ புவனேச்வரி தேவீ.

புதுக்கோட்டையில் புவனேச்வரி

புதுக்கோட்டை ஆஸ்திகத்தின் கோட்டையாகவும், தர்மத்தின் கோட்டையாகவும் தெய்வமணம் வீசிக்கொண்டு தென்னகத்தில் பிரகாசிக்கின்றது. இந்த தேவ கோட்டையில் மஹா சித்த புருஷர்களான ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரம்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில், ஸ்ரீ புவனேச்வரியின் திருவருள் தூண்ட ஸ்ரீ புவனேச்வரியை ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் பிரதிஷ்டை செய்திருக்கின்ருர்கள். ஸ்ரீ சக்ர பூர்ண மஹாமேருவையும் பிரதிஷ்டை செய்திருக்கின்ருர்கள்.

ஸத்குரு சாந்தானந்தாவதூத ஸ்வாமிகள்

இந்த ஸ்ரீ புவனேச்வரீ தேவிக்கு கோடி அர்ச்சனை வைபவத்தை துவக்கி இருக்கின்ருர்கள் ஸ்ரீ ஸ்வாமிகள். அது நாம் செய்த பாக்கியம். நாடு செய்த பாக்கியம். இந்த கோடி அர்ச்சனையை ஸ்ரீ ஸ்வாமிகளே முன்னின்று நடத்துகின்ருர்கள். ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் பால்யத்தில் பல ஆண்டுகள் மௌனியாய் ஸ்ரீ புவனேச்வரீ மந்திரஜபத்தில் ஈடுபட்டு தவமியற்றியவர்கள். தொல்லைதரும் பல பிராணிகள் நிறைந்த காடுகளில் பல்லாண்டு ஸஞ்சாரம் செய்தவர்கள். புவனேச்வரீ மந்திரத்தை ஸித்தி செய்த மஹானுபாவராவார். இவர் நீறு பூத்த நெருப்பாய் தவத்

Koviloor Digital Library

தின் குன்றாய் காணும் புவனேச்வரியாய் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களுடைய முன்னிலையில் வேதமுறை வழுவாது சாக்த ஸம்ப்ரதாய மறிந்த பல சிறந்த வைதிகர்கள் இந்த கோடி அர்ச்சனையை பக்தி சிரத்தையுடன் மிகவும் அழகாய் செய்கின்றார்கள். இந்த கோடி அர்ச்சனை பொருளுதவி செய்பவருக்கு மட்டுமன்றி உலகங்களுக்கெல்லாம் நன்மையையும் வளத்தையும் பெருக்கும்.

அர்ச்சனை

இங்கு புவனேச்வரிக்கும் ஸ்ரீ சக்ரபூர்ண மகா மேருக்கும் லலிதாஸஹஸ்ர நாமத்தைக் கொண்டு அர்ச்சனை அழகாய் நடக்கிறது. இந்த லலிதா ஸஹஸ்ரநாமத்தைக் கொண்டு செய்யும் அர்ச்சனை யின் பலத்தை (பயனை) நாம் தெரிந்து கொண்டு செய்தால் அது அதிகமாக பலனை அளிக்கும். அதை இங்கே காண்போம்.

வாக் தேவிகளுக்கு லலிதா தேவியின் ஆணை

முன்னொரு சமயம் ஸ்ரீ லலிதா பரமேச்வரீ பக்தர்கள் உய்ய வேண்டும் என்று விரும்பினாள். உடனே வசினீ முதலிய வாக்தேவிகளை அழைத்து "நீங்கள் என் அருளால் சொல்லின் தெய்வங்களாய் அமர்ந்திருக்கின்றீர்கள். என் பக்தர்களுக்கு சொல் வளம் அருளும் பேறும் பெற்றிருக்கின்றீர்கள். என் ஆயிரம் பெயர்களைக் கொண்ட ஸ்தோத்திரத்தை

Koviloor Digital Library

பாராயணம் செய்யும் பக்தர்கள்பால் எனக்கு மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நீங்கள் ஒரு ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்தை இயற்றுங்கள்" என்று அருளாணையிட்டாள். ஆணையை ஏற்ற வசினீ முதலிய வாக் தேவிகள் ஆயிரம் நாமாக்களைக் கொண்ட அழகிய லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தைச் செய்தருளினர்.

ஒரு சமயம் ஸ்ரீ லலிதா பரமேச்வரி சிம்மாஸனத்தில் அமர்ந்தாள். அவளை வழிபட எல்லோரும் திரண்டனர். ஸரஸ்வதியுடன் கூட கோடிக்கணக்கான பிர்மாக்களும், லக்ஷ்மீயுடன் கூடிய கோடிக் கணக்கான விஷ்ணுக்களும், கௌரீயுடன் சேர்ந்த கோடிக்கணக்கான ருத்திரர்களும் அவரை வழிபடக் குழுமி நின்றனர். மந்திரிணீ, தண்டினீ முதலிய எண்ணிலாச் சத்திகளும் மற்றும் பலரும் வழிபட வந்து சூழ்ந்தனர். எல்லோருக்கும் லலிதா பரமேச்வரீ திவ்ய தரிசனம் தந்தருளினுள்.

இந்நிலையில் லலிதா பரமேச்வரியின் கடைக்கண் நோக்கம் பெற்றுய்ந்த வசினீ முதலிய வாக் தேவிகள் கைகூப்பியவர்களாய் பக்தியுடன் லலிதா பரமேச்வரியின் திருவருளால் இயற்றிய ஆயிரம் நாமாக்களையும் கூறி துதித்தனர். அதனுல் பெரு மகிழ்ச்சி கொண்ட லலிதாதேவீ, துதியைக் கேட்டு ஆனந்தத்தில் திளைத்திருந்த அனைவரையும் நோக்கி, "என் ஆணையால் இயற்றப்பட்டதாகும் இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம். இந்த ஸஹஸ்ரநாமாவில் எனக்கு பெரு மகிழ்ச்சியூட்டும் நாமாக்கள் நிறைந்து இருக்கின்றன. இந்த

Koviloor Digital Library

ஸ்துதியைப் படிக்கும் பக்தன் எனக்கு மிகப் பிடித்தவனுகின்ருன். அவனுக்கு வேண்டியவற்றை எல்லாம் நான் வழங்குவேன். நீங்கள் இந்த நாமாவினுல் என்னைப் போற்றுங்கள்" என்று அருளினுள்.

மூவரும் பிறரும் படித்த ஸ்தோத்திரம்

அது கேட்ட பிரம்மா விஷ்ணு ருத்திரன் முதலிய தேவரும் மந்திரிணீ முதலிய சத்திகளும் மற்றவரும் லலிதா பரமேச்வரிக்கு ப்ரீதியையுண்டுபண்ணும் இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தை படிக்க ஆரம்பித்தனர். ஆகவே நாமும் அந்த லலிதா பரமேச்வரியை பிரீதி செய்யும் இந்த ஸஹஸ்ர நாமத்தைப் படித்து ஸ்ரீ புவனேச்வரியை வழி படுவதே மிகவும் நல்ல முறையாகும்.

ஸஹஸ்ரநாமாவின் பலம்

रहस्यानां रहस्यं च ललिताप्रीतिदायकम् ।
अनेन सदृशं स्तोत्रं न भूतं न भविष्यति ।
सर्वरोगप्रशमनं सर्वसंपत्प्रवर्धनम् ।
सर्वापमृत्युशमनं कालमृत्युनिवारणम् ।
सर्वज्वरार्तिशमनं दीर्घायुष्यप्रदायकम् ॥

இந்த ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரம், மிக ரஹஸ்யமானது. லலிதா தேவிக்கு பிரீதியைக் கொடுக்கும். இது போன்ற ஸ்தோத்திரம் இருந்ததும் இல்லை. இருக்கப் போவதும் இல்லை. இது

Koviloor Digital Library

எல்லா ரோகங்களையும் போக்கும், எல்லா ஸம்பத்தையும் வளர்க்கும், அபமிருத்யுவையும், கால மிருத்யுவையும், தடுக்கும். ஜ்வரமெல்லாம் நீங்கும், நீண்ட ஆயுளை அளிக்கும்.

ஒரு நாமாவின் மஹிமை

இதிலுள்ள ஒரு நாமாவைச் சொன்னாலே இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் புண்ணிய பயன்கள் கிடைக்கும். ஆயிரம் நாமாவையும் சொன்னால் அதற்குப் பலன் எவ்வாறு கணக்கிட்டுக் கூற முடியும்?

1. गङ्गादिसर्वतीर्थेषु यः स्नायात् कोटिजन्मसु ।
2. कोटिलिंगप्रतिष्ठां तु यः कुर्यादविमुक्तके ॥
3. कुरुक्षेत्रे तु यो दद्यात् कोटिवारं रविग्रहे ।
कोटिं सौवर्णभाराणां श्रोत्रियेषु द्विजन्मसु ॥
4. यः कोटिं हयमेधानां आहरेद्गांगरोधसि ।
5. आचरेत्कूपकोटीर्यः निर्जले मरुभूतले ॥
6. दुर्भिक्षे यः प्रतिदिनं कोटिब्राह्मणभोजनम् ।
श्रद्धया परया कुर्यात् सहस्रपरिवत्सरान् ।
तत्पुण्यं कोटिगुणितं लभेत्पुण्यमनुत्तमत् ।
रहस्यनाम साहस्रे नाम्नोऽप्येकस्य कीर्तनात् ॥

1. கோடி ஜன்மாக்களில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானத்தினால் உண்டாகும் புண்ணியத்தையும்,

Koviloor Digital Library

2. காசியில் கோடி லிங்கங்களின் பிரதிஷ்டையினுல் ஏற்படும் புண்ணியத்தையும்,

3. குருக்ஷேத்திரத்தில் சூரிய கிரஹணத்தின் போது வேதமறிந்த பிராமணர்களிடத்தில் கோடித் தடவை கோடி சுவர்ணபாரத்தை தானமாகக் கொடுத்ததால் உண்டான புண்ணியத்தையும்,

4. கங்கைக் கரையில் கோடி அசுவமேதம் செய்ததால் உண்டான புண்ணியத்தையும்,

5. ஜலமற்ற வரண்ட பூமியில் கோடிக்கணக்கான கிணறுகள் வெட்டியதால் உண்டான புண்ணியத்தையும்,

6. துர்பிக்ஷ காலத்தில் ஆயிரமாண்டுகள் பிரதி தினமும் கோடி பிராமண போஜனம் செய்து வைத்ததால் ஏற்பட்ட புண்ணியத்தையும் கோடியால் பெருக்கினுல் உண்டாகும் பெரும் புண்ணியம் ஸஹஸ்ர நாமாவில் உள்ள ஒரு நாமாவைக் கூறினுலேயே கிடைக்கும்.

பாபமும் போகும்

रहस्य नाम साहस्रे नामैकमपि यः पठेत् ।
तस्य पापानि नश्यन्ति महान्त्यपि न संशयः
नित्यकर्माऽननुष्ठानात् निषिद्धकरणादपि ।
यत्पापं जायते पुंसां तत्सर्वं नश्यति द्रुतम् ॥
बहुनात्र किमुक्तेन शृणु त्वं कलशीसुत ।
अत्रैक नाम्नो या शक्तिः पातकानां निवर्तने ।
तन्निवर्त्यमघं कर्तुं नालं लोकाश्चतुर्दश ॥

Koviloor Digital Library

இந்த ஸஹஸ்ர நாமாவில் ஒரு நாமாவைப் படித்தாலும் அவனுக்கு மஹாபாதகங்களும் அற்றுப் போம். நித்ய கர்மாவை அனுஷ்டிக்காததாலும், செய்யக் கூடாததை செய்ததாலும் எந்த பாபம் நேருமோ, அவை எல்லாம் இதனுல் சீக்கிரமே அழியும். அதிகம் கூறுவானேன். ஒரு நாமாவுக்கு எவ்வளவு பாதகங்களைப் போக்கும் சக்தியுண்டோ, அவ்வளவு பாபத்தை பதினான்கு உலகங்கள் கூடச் செய்ய முடியாது. இப்படி நாமாவின் பெருமை கூறப்பட்டிருக்கின்றது.

ஆகவே நாம் தினம் லக்ஷம் நாமாவாக 100 நாட்களில் கோடி நாமாவைக் கூறி அர்ச்சனை செய்யும் வாய்ப்பு கிடைத்தால் நம்மைவிட பேறு பெற்றவர்கள் இல்லை என்றே சொல்லலாம். இந்த ஜன்மாவில் தேவிக்கு அர்ச்சனை செய்தால்தான் அடுத்த பிறவி நமக்கு மகிழ்ச்சி தரும் பிறவியாய் இருக்கும். எவர் முன்பிறவியில் பவானியை குந்தம் சம்பகம் பில்வம் முதலியவற்றுல் பூஜித்தனரோ அவரே இப்பிறவியில் அரசர்களாய் திகழுகின்றனர்.

यैः पूजिता पूर्वभवे भवानी
सत्कुन्दपुष्पैः अथ चंपकैश्च ।
बिल्वैर्दलैस्ते भुवि भोगयुक्ताः
नृपा भवन्तीत्यनुमेयमेव ॥

இதை தேவீ பாகவதம் வலியுறுத்தும்.

வையம் துரக மதகரி மாமகுடம்சிவிகை
பெய்யுங் கனகம் பெருவிலை யாரம் பிறைமுடித்த

Koviloor Digital Library

ஐயன் திருமனே யாளடித் தாமரைக் கன்புமுன்பு
செய்யுந்தவமுடை யார்க்குள வாகிய
[சின்னங்களே.

என்ற அபிராமிபட்டர் வாக்காலும் இதை அறியலாம். இப்போது தனிகர்களாய் பேறெல்லாம் பெற்றவர்களும் அடுத்த பிறவியிலும் நற்பிறவி பெற்று நலமெல்லாம் பெற பராசக்தியை அர்ச்சிக்க வேண்டும்.

நல்ல வாய்ப்பு

ஆகவே நமக்கு இப்போது ஒரு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்தக் கோடி அர்ச்சனேயில் கலந்துகொண்டு பேறெல்லாம் பெற ஆஸ்திகர்கள் ஆதரவு நல்க வேண்டும்.

லலிதையும் புவனேசியும்

இந்த லலிதா ஸஹஸ்ரநாமாக்களில் நன்ருக புவனேச்வரீ நாமா காணப்படுகின்றது—

पुरुषार्थप्रदा पूर्णा भोगिनी भुवनेश्वरी । என்று.

அவ்வாறே ह्रींकारी ह्रीमती हृद्या हेयोपादेयवर्जिता ।

என்று, மாயாபீஜம் என்றும், புவனேசீ என்றும் மந்திர சாஸ்திரங்களில் பிரசித்தமான ஸ்ரீ புவனேச்வரீயைக் குறிக்கும் ह्रींकारी என்ற நாமாவும் காணப்படுகின்றது.

Koviloor Digital Library

सिन्धूरारुणविग्रहां त्रिनयनां माणिक्यमौलिस्फुर-
त्तारानायकशेखरां स्मितमुखीं आपीनवक्षोरुहाम् ।
पाणिभ्यां मणिपूर्णरत्नचषकं रक्तोत्पलं बिभ्रतीं
सौम्यां रत्नघटस्थसव्यचरणां ध्यायेत्परामम्बिकाम् ॥

என்று லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திற்கு தியான சுலோகம் கூறப்பட்டிருக்கிறது. இதை பாஸ்கராசாரியாரும் ஏற்றிருக்கின்றார்கள் என்பதை அவரின் உரை காட்டுகின்றது. இந்த தியான சுலோகம் மூன்று அக்ஷரங்கொண்ட புவனேச்வரீ மந்திரத்திற்கு தியானமாய் சாரதா திலகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனால் லலிதையையும் புவனேச்வரீயையும் ஒன்ருகக் கருதியிருப்பது தெரிய வருகிறது. ஆகவே லலிதா ஸஹஸ்ரநாமத்தால் புவனேச்வரீயையும் ஸ்ரீ சக்ர பூர்ண மஹாமேருவையும் ஒருங்கே பூஜிப்பது பொருத்தமாய் அமைகிறது. புவனேச்வரீ லலிதை பற்றி மூர்த்திபேத விசாரத்தை ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகளின் அருளால் அண்மையில் வெளிவரவிருக்கும் "ஸ்ரீ புவனேச்வரீ தத்வ ப்ரகாசிகை" என்ற நூலில் விளக்கமாகக் காணலாம்.

ஹோமம்

இந்த கோடி அர்ச்சனையின் அங்கமாக 25-5-67 ஆரம்பித்து 3-6-67 வரையில் தசாம்ச ஹோமம் அதற்கான திரவியங்களைக்கொண்டு புவனேச்வரீ கிருபையால் நடத்த ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்மானித்

Koviloor Digital Library

திருக்கின்றனர். ஆகவே அன்றுடம் நடைபெறும் கோடி அர்ச்சனைக்கும் நடைபெறவிருக்கும் கோடி அர்ச்சனையின் அங்கமான ஹோமத்திற்கும் நல்லாதரவு தந்து சிறப்பிக்கவேண்டியது ஆஸ்திகர்களின் கடமையாகிறது.

எல்லாவற்றிலும் பங்குகொண்டு நலமெல்லாம் பெற்று எல்லோரும் வாழப் பிரார்த்திக்கிறேன்.

புவனேச்வரி கோடி அர்ச்சனையில் நடைபெறும் காரியக் கிரமம்

1. மஹாகணபதி ஹோமம்
2. ஆவஹந்தி ஹோமம்
3. நவக்ரஹ ஹோமம்
4. ஏகாதச ருத்ரமஹன்யாஸ ஜபம்
5. தேவி மஹாத்மிய பாராயணம்
6. மஹாபிஷேகம்
7. நவாவரண பூஜை
8. கோடி அர்ச்சனை காலை 10 மணிமுதல் மாலை 4 மணி வரை
9. புஷ்பாஞ்சலி மாலை 5 மணிமுதல் 8 மணி வரை
10. ஸ்ரீ வித்யா ஹோமம்
11. மஹா தீபாராதனை
12. உபந்யாஸங்கள்; இன்னிசைக் கச்சேரிகள் கதா காலக்ஷேபங்கள்

॥ जय जय भुवनेश्वरी ॥

ஜய ஜய புவனேச்வரீ

Koviloor Digital Library

வேண்டுகோள் !

அதிஷ்டானத்தில் வைதீக (வேதோக்த) முறைப்படி பூஜைகள், ஆராதனைகள் நடைபெறுவது எல்லோரும் அறிந்த விஷயம். உலகம் முழுவதும் க்ஷேமமடையச் செய்வது ஆஸ்திக மக்களின் கடமையாகும். புனிதமான ஸ்ரீ புவனேச்வரி மாதாவின் கைங்கர்யத்தில் அர்ச்சனை ஸத்காரியத்தில் எல்லோரையும் ஊக்குவிக்க வேண்டும்.

ஸ்ரீ புவனேச்வரி அபிஷேக அர்ச்சனை ஆராதனை உற்சவம் முதலிய நல்ல காரியங்களில் நாமெல்லோரும் உரிய பங்கு கொண்டு கூடுமான கைங்கர்யங்களைச் செய்தால் மந்திர ஜபம் செய்த புண்ணியமும் வேதாத்யயனம் செய்த புண்ணியமும் சுலபமாகக் கிடைக்கும்.

தர்ம சாஸ்த்திரத்தை அருளிய மனுவும் கலி யுகத்தில் தானம் ஒன்றினலேயே எல்லா நற்பயன் களும் கிடைக்கின்றன என அருளியிருப்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆதி சங்கர பகவத்பாதாளின் வாக்கையும், மந்திர சாஸ்த்திரத்தை நம்பி பிரதி மாதா மாதமும் ஜன்ம நக்ஷத்திர தினத்தன்று ஸ்ரீ புவனேச்வரிக்கு அபிக்ஷேகம், அர்ச்சனை செய்வதால், ஆயுள், புத்திர பாக்யம், ஐச்வர்யம், கீர்த்தி, முதலியவைகள் உண்டாகும் என்று நம் மந்திர சாஸ்திரங்கள் சொல்லுகின்றபடியால் ஆஸ்திகர்கள் அனைவரும்

Koviloor Digital Library

தம் தம் ஜன்ம நக்ஷத்திர தினத்தன்று ஸ்ரீ புவனேச்வரிக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்யும்படி ஏற்பாடுகள் செய்து, ஸ்ரீ தேவியின் அருளுக்கும் ஸ்ரீ ஸத்குரு பகவானின் அனுக்ரஹத்திற்கும் மேலும் மேலும் பாத்திரர்கள் ஆகும்படி ஞாபகப் படுத்துகிறோம். தங்கள் க்ஷேமத்திற்காகவும், தங்கள் பரம்பரையின் க்ஷேமத்திற்காகவும், ஆயுள் மெம்பராகச் சேர்ந்துகொள்வதற்கு ரூ. 101 - செலுத்தி ஆயுள் மெம்பராகச் சேர்ந்து மேலும் மேலும் ஆதிபராசக்தியாம் அன்னை ஸ்ரீ புவனேச்வரியின் அனுக்ரஹத்துக்குப் பாத்திரமாகவும்.

சுபம் !!!

உ

ஸ்ரீ கணேசாய நம :

ஸ்ரீ ஸத்குரு பரமாத்மனே நம:

ஸ்ரீ புவனேச்வரி கோடி நாமார்ச்சனை ஞாபகார்த்த மஹா மந்த்ரம்,

புவனேச்வரி நகர், — புதுக்கோட்டை-1.

ஸ்ரீ புவனேச்வரி பிரார்த்தனை.

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரும்மேந்திர ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகளின் அதிஷ்டானம், புதுக்கோட்டை மாநகரில் (திருச்சி ஜில்லா), ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த அவதூத ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி, பராபவ வருஷம் மாசி மாதம் 12-ம் தேதி (24—2—1967) முதல் நடைபெற்றுவரும்,

Koviloor Digital Library

ஸ்ரீ புவனேச்வரி ஸ்ரீ சக்ர பூர்ண மகாமேரு கோடி நாம மஹா மந்த்ர அர்ச்சனையில் மெய்யன்பர்கள் க்ஷேமத்தைப் பெற்றுய்ய தேவீ ஸ்ரீ புவனேச்வரியின் பிரார்த்தனை மந்த்ரத்தை அனுதினமும் 108 தடவை ஜபித்து தாம் விரும்பிய இஷ்டகாம்யார்த்தங்களைப் பெற்றுய்ய வேண்டுமாக ஸ்ரீ ஸத்குரு சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்கள் அனுக்ரஹிக்கிறார்கள்.

सर्वं चैतन्यरूपां तां
आद्यां शक्तिं च धीमहि ।
ह्रींकार रूपिणीं देवीं
धियो या नः प्रचोदयात् ॥

ஸர்வ சைதன்ய ரூபாம் தாம்
ஆத்யாம் சக்திம் ச தீமஹி,
ஹ்ரீங்கார ரூபிணீம் தேவீம்
தியோ யா ந: ப்ரசோதயாத்.

அதன் கருத்து: சகல சராசரப் பிரபஞ்சமும் தோன்ற பிரகிருதி சக்தியாய் ஸர்வஜீவராசிகளிலும் ஆத்ம ஸ்வரூபிணியாய் வியாபித்து, ஸ்வநாதப் ப்ரபஞ்ச பீஜமான ஹ்ரீங்கார ஸ்வரூபிணியாய் உலகில் அறிவெனும் ஞானத்தின் அதி தெய்வமாய் விளங்கும் ஸ்ரீ ஜகன்மாதா ஸ்ரீ புவனேச்வரி நமது நல்வினைக்குக் காரணமான நற்புத்தியை அளித்து அருள்பாலிக்கட்டும்.

இவ்வுலகில் உயிரினங்களில் உயர்ந்த மனிதப் பிறவியைப் பெற்றிருக்கிறோம். அறம், பொருள்,

Koviloor Digital Library

இன்பம் என்ற பிறவிப் பயனைப் பெறுவதற்கு உயிருக்குள் உயிராய் ஸர்வப் பிரகிருதி சக்தி யாயினும் முக்யமாய் புத்தி சக்தியாயிருந்து, பிரபஞ் சத்தை கர்மபந்தத்திலும், சுக துக்கங்களிலும் செலுத்தி ஆட்சி செலுத்தும் ஜகன்மாதாவின் அருளே அரிய சாதனமாகும். நாம் ஐம்புலன்களின் வழி சென்று சௌக்யமும் சாந்தியும் பெற வகை யறியாது தவிக்கும் வேளையில், ஸ்ரீ ஜகன்மாதா அளிக்கும் அருளாகிய புத்தி சக்தியே உற்ற துணை யாகும். புத்தியின் காரணமாகவே மனிதன் மலர்ச்சியையும் இகழ்ச்சியையும் அடைகின்றான். அன்னை அளித்த ஞான சக்தியாலேயே இல்லறத் தவர்களும், யோகிகளும் ஞானிகளாய் பேரின்பம் பெறுகின்றனர்.

ஆதலால் நித்திரையிலிருந்து துயிலெழும் நாம், ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கஷ்டங்கள் நீங்கி சுகம் பெறுவதாயின் அனுதினமும் அன்னை ஸ்ரீ புவனேச்வரியிடம் ஞானசக்தி என்ற அருளை பிரார்த்திக்க வேண்டும். அத்தகைய பிரார்த்தனை மந்த்ரமே தலைப்பில் காண்பதாகும்.

அன்னை அளித்த நல்லறிவெனும் அருளால், நன்மனம், நற்குணம், நற்கர்மம் பெற்று இம்மை மறுமை யின்பம் என்ற பிறவிப் பயனை எளிதில் அடைவோமாக.

சுபம்

அதிஷ்டான காரியதரிசி.

உ. கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
4197
Q25

Koviloor Digital Library

Koviloor Digital Library

P. P. PDK T.